இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, குளுகம்மன ரஜமகா விகார தாயகசபை (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1986, ஒக்ரோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1986, ஒக்ரோபர் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

## 1986 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க குளுகம்மன ரஜமகா விகார தாயக சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 28/85

### குளுகம்மன ரஜமகா விகார தாயக சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

முன்னுரை.

"குளுகம்மன ரஜமகா விகார தாயக சபை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதன் முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட கழகம் எக் குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, குளுகம்மன ரஜமகா விகார தாயக சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

குளுகம்மன ரஜமகா விகார தாயக சபையைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) குளுகம்மன ரஜமகா விகார தாயக சபையின் இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "குளுகம்மன ரஜமகா விகார தாயக சபை" என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும்; அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கலாம் அதற்கு எதிராக வழக்குந் தொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வழக்குத் தொடுக்கவும்படலாம். ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாகவிருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :—

(அ) நல்லெண்ணத்தை மேம்படுத்துவதன் மூலம் தார்மீக செயற்பாடுகளில் ஈடுபடுதலும், அத்தகைய செயற்பாடுகளில் கூட்டாகச் செயலாற்றும் பழக்கத்தினை ஊக்குவித்தலும்;

(ஆ) விகாரையின் வரலாற்றுப் பெருமைக்கும் அதன் வரலாற்றுப் புகழ் வாய்ந்த கட்டமைப்புகளுக்கும் சேதம் விளைவிக்காமல் விகாரையை அபிவிருத்தி செய்தலும் பேணலும்;

9—ஏ 033336—8,760 (86/10))

(இ) அத்தகைய விகாரையில் வதியும் குருமாரின் கௌரவத்தை மேம் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும், அத்தகைய விகாரைக்குரிய அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தின் ஏமக்காப்பினை உறுதிப்படுத்துதலும்; அத்துடன்

(ஈ) அடுத்துள்ள விகாரைக் காணிகளில் வாழும் மக்களுக்குச் சமயா சார வாழ்க்கை வாழ்வதற்கு உதவி புரிவதற்குச் சாதகமான சூழ் நிலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

கூட்டுத் தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத் தக்கவையான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரி யங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவ முடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் திறத் தலும், தொழிற்படுத்துதலும் மூடுதலும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பு இல்லாது ஏதேனும் பணத்தைக் கடன்பெறுதல் அல் லது திரட்டுதல், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுதல் அல்லது சேகரித்தல் கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடுசெய்தல், அத் துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்துதலும், வேலைக்கமர்த் தலும், வேலையிலிருந்து நீக்குதலும் என்பனவும் அடங்கும்.

பொதுப் பேரவை.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவி லுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத் தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப் படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டமைந்த பொதுப் பேரவை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பொதுப் பேரவை, இச்சட்டம் தொடங்கும் தேதியில் பதவிவகிக்கும் கழகத்தின் பொதுப் பேரவை உறுப் பினர்களைக் கொண்டதாதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

6. திட்டமிடுதல், நிதி பற்றிய கருமங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத் திற்கு ஆலோசனை அளிக்கும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்தின் விதி களில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையின ரான ஆட்களைக் கொண்டமைந்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை யொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் விதிகள்.

7. (1) உறுப்பினரின் ஏதேனும் ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் உறுப் பினரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல் அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் என்பவற்றுக்காகவும் பொதுப் பேரவையினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறுஅலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படு வதற்காகவும், கூட்டுத்தாபன அலுவல்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் கூட்டுத்தாபன அலுவல்களை வேறுவகையில் பொதுவாக முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்து

வதற்காகவும் கூட்டுத்தாபனம் காலத்திற்குக்காலம் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேவிதமான கூட்டத்தில், ஆயின் (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய அவை மாற்றப்படலாம். அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ளதாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதியெதுவும் அல்லது இதன் பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய எவ்விதியும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டன்றி மாற்றப்படலாகாது, அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது. அது திருத்தப்படலாகாது அல்லது இல்லாதாக்கப்படலாகாது.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது இல்லாதாக்குகை பொதுப் பேரவையினால் முன்னராகவே அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியில் வலுவிலுள்ளவையான கழகத்தின் விதிகள் இச்சட்டத்தினதும் எழுத்திலானவேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அவை ஒவ்வாதனவாக இராத அளவுக்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**கழகத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் கழகத்திற்கு செலுத்தப்படவுள்ள கடன்களும்.**

8. இச்சட்டம் தொடங்கும் தேதியில் கழகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் கழகத்திற்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பனவும், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டுமென்பது.**

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பொதுப்பேரவையின் உறுப்பினர்களில் இருவரின் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.**

10. கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, நன்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பனவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி தகுதியுடையதாதல் வேண்டும்; அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ளனவாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க,

குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கடன் பெறுவதற்கான தத்துவம்.

11. கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கென நிதிகளைத் திரட்டுவதும், அத்தகைய நோக்கத்துக்காக எவையேனும் ஈடுகளை, முறிகளை அல்லது கடப்பாடுகளை உருவாக்குவதும், எழுதி நிறைவேற்றுவதும், அளிப்பதும் அல்லது வழங்குவதும் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு திரட்டப்படக்கூடிய தொகைகளின் கூட்டுமொத்தம், பொதுப் பேரவையினால் அந்நோக்கத்துக்கெனத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை விஞ்சுதலாகாது.

மீளளிப்பு.

12. கூட்டுத்தாபனத்தின் சார்பிலும் அதன் நன்மைக்கெனவும் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், முகவரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் அளவுக்குக் கூட்டுத்தாபனம் அத்தகைய உறுப்பினருக்கு, அலுவலருக்கு, முகவருக்கு அல்லது சேவையாளருக்கு மீளளிப்புச் செய்யலாம்.

குடியரசினதும் மறு பேரினதும் உரிமைகளைப் பேணல்.

13. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகாது அல்லது பாதிப்பதாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.